1971 டிசம்பர் 13]

வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இது பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலே முடிவெடுக்கப்பட்டு பிராட்வேயைச் சீர்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்தப் பிராட்வே பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்த ஏற்பாடுகள் நடக்கின்றன என்று சொன்னார்கள். அங்கு பல ஆண்டுகளாக கூடை பின்னுகிறவர்கள், தட்டி பின்னுகிறவர்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வசதிகள் செய்து கொடுக்கப் போகிறார்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அவர்களுக்கு வேறு மாற்று இடம் ஏதாவது பார்த்துத் தரவேண்டுமே தவிர, அந்தப் பேருந்து நிலையம் நீண்ட நாட்களாக மக்களுக்கு அசௌகரியமான தன்மையில் அமைந்திருக்கிறது. பஸ்கள் வந்தாலும். பயணிகள் தங்குவதற்கோ அல்லது பஸ்களைப் பிடிப்பதற்கோ அல்லது அவர்களுக்கு ஓய்வு பெறவோ அங்கு வசதி வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அங்குதான் பேருந்து நிலையத்தினை சீர்படுத்தி அமைக்க வேண்டும். கூடை பின்னுகிறவர்கள், மற்றவர்களுக்கு மாற்று இடம் பார்த்துத் தர வேண்டும். அதை நகராட்சி மன்றம் முறைப்படி கவனிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பல ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து வருகிறோம், ஆராய்ந்து வருகிறோம் என்ற பதிலைத்தான் நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். எனவே, குறைந்த பட்சம் இந்த ஆண்டிலாவது அதைச் சீர்படுத்துவதற்காக அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா ? அதற்கு எவ்வளவு காலமாகும் என்பதை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மாநகராட்சிமன்றம் அதற்கான திட்டத்தைத் தீட்டிவிட்டது. சிலபல மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று தலைமைப் பொறியாளர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஒரு நாள் கூட குறிப்பிடப்பட்டது அடிக்கல் நாட்டுவதற்காக. அரசாங்கத்தின் அனுமதி இல்லாததால், அதைப் பெற்று விட்டு பிறகு அடிக்கல் நாட்டலாம் என்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

நகராட்சிப் பேருந்து நிலையங்கள்

*** 305 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சிப் பேருந்து நிலையம் கட்ட அந்த நகராட்சியால் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

[1971 டிசம்பர் 13

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாயூரம் நகராட்சியால் பேருந்து நிலையம் கட்டுவதற்கு இதுவரையில் ரூ. 1,70,284.37 செலவு செய்யப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாயூரம் நகராட்சிப் பேருந்து நிலையம் கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டையும், அதற்கு நம் அரசாங்கம் கடனுகவும் மானியமாகவும் வழங்கியிருக்கிற தொகையையும், அந்த இடத்தில் பேருந்து நிலையம் எப்போது கட்டி முடிக்கப்பட இருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 1,70,284.37. பேருந்து நிலையத்தில் மாற்று வேலைகள், பயணிகள் தங்குமிடம், டிக்கட்ஸ் கொடுக்கப்படும் இடம், அலுவலர்கள் அறை போன்றவைகளுக்கு கடனுக ரூ. 18,000 கொடுக்கப்பட்டது. அந்த ரூபாய் 18,000-ம் செலவழிக்கப்பட்டது. பிறகு ரூபாய் 40,000 கடனுகப் பெற்ருர்கள். அதையும் செலவழித்திருக்கிருர்கள். பிறகு ரூ. 15,000 பெற்ருர்கள். அதுவும் இந்த வகைகளுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. நகராட்சிப் பேருந்து நிலையத்தில் கடைகள் கட்டுவதற்காக ரூ. 10,000 கொடுக்கப்பட்டது. ரூ. 18,263.55 காசு அதற்காகச் செலவழித்திருக்கிருர்கள். பிறகு நகராட்சி மன்ற பேருந்து நிலயத்தில் கட்டைச் சுவர் கட்ட, வட பாகத்தை அகலப்படுத்த ரூ. 15,000 கடன் பெற்ருர்கள். அதில் ரூ. 7,500-யை செலவிட்டுவிட்டு மீதி ரூ. 7,500-ஐ அரசாங்கத்தினிடம் திருப்பித் தந்திருக்கிருர்கள். மூன்ரும் நிலைக்கட்டத்தில் ரூபாய் 20.000 பெற்ருர்கள். அதையும் செலவழித்திருக்கிருர்கள். கடைகள் கட்டுவதற்காக ரூ. 20,000 பெற்ருர்கள் 21—5—70-ல் மேற்கொண்டும் செலவாகியிருக்கிற அவ்வளவையும் சேர்த்து ரூ. 1,70,284.37.

***306 வினு—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டையில் முனிசிபல் பஸ் நிலையம் அமைக்க அரசு கடன் தொகை எதும் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. ஏ. வகாப் : இராணிப்பேட்டை பெரிய நகராட்சி. அங்கு பஸ்கள் வந்து தங்குவதற்கு போதிய இடவசதி இல்லை. ஷாப் வசதியும் இல்லை. ஆகவே அந்த முனிசிபாலிட்டி இது குறித்து தீர்மானம் போட்டு அரசாங்கத்தை அணுகியிருக்கிருர்கள். இப்போதாவது இதைக் கவனித்து ஆவன செய்வார்களா ?